## 1. மதிப்பெண் சான்றிதழ்களின் சான்றிட்ட நகல் வழங்குதல்.

| | |
|---|---|
| விண்ணப்பிப்பதற்கான தகுதி | இத்துறையால் வழங்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ்களை மீள திரும்பப் பெற வாய்ப்பில்லாத நிலையில் தவறவிட்ட மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவார். |
| விண்ணப்பிப்பதற்கான விவரம் | மதிப்பெண் சான்றிதழ்களின் சான்றிட்ட நகல் விண்ணப்பங்களை அரசுத் தேர்வுகள் இயக்ககம் மற்றும் அதன் மண்டல அலுவலகங்களில் கட்டணமின்றி பெற்றுக் கொள்ளலாம். மேலும், இத்துறையின் இணையதளத்தின் வாயிலாகவும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.<br><br>மேல்நிலை மற்றும் பத்தாம் வகுப்புத் தேர்விற்கான, மதிப்பெண் சான்றிதழ்களின் சான்றிட்ட நகல் விண்ணபத்தினைப் பூர்த்தி செய்து, பள்ளித் தேர்வர்கள் தலைமை ஆசிரியரிடமும், தனித்தேர்வர்கள் அவரவர் கடைசியாகப் பயின்ற அல்லது அருகில் உள்ள பள்ளித் தலைமை ஆசிரியரிடம் அத்தாட்சிச் சான்றிதழ் பெற்று, அதற்கான கட்டணத் தொகையினைச் செலுத்தி, அசல் செலுத்துச் சீட்டினை விண்ணபத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br><br>தொடக்கக்கல்வி பட்டயத் தேர்வர்கள் விண்ணபத்தில் உள்ள விவரங்களைப் பூர்த்தி செய்து, மதிப்பெண் சான்றிதழின் நகலினை இணைத்து கட்டணத் தொகையினைச் செலுத்தி, அசல் செலுத்துச் சீட்டினை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். |
| கட்டண விவரம் | முதல் முறை CCM – ரூ.305/–<br>இரண்டாவது முறை CCM – ரூ.405/–<br>ஒவ்வொரு சான்றிதழுக்கும் மேற்காண் தொகையினைச் செலுத்துச் சீட்டின் மூலம் கருவூல வங்கிக் கிளைகளில் செலுத்தப்படவேண்டும். |
| அணுக வேண்டிய அலுவலர்கள் | பத்தாம் வகுப்பு/(SSLC,OSLC)/<br>தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு – இணை இயக்குநர் (பணியாளர்)<br>ஆங்கிலோ இந்தியன், மெட்ரிக் – கூடுதல் செயலாளர்(மெட்ரிக்)<br>மேல்நிலை – இணை இயக்குநர் (மேல்நிலை) |